IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.51/2018
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 1.05p.m.

வா.சா.1 சாட்சி ரமேஷ் த.பெ.கோபால்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 16.03.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1.வா.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தில் அடியளவுகள் கூறப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வழக்குச் சொத்து பற்றி தனித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தந்தை பெயர் கோபால் என்றால் சரிதான். என்தந்தையுடன் உடன்பிறந்தவர்கள் 4பேர் என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் வாங்கியது 10 செண்டு என்றால் சரிதான்.

2. எனது தந்தை கிரையம் வாங்கிய 10 செண்டுக்கு கிழக்கே உள்ள10 செண்டை பெரியபாண்டி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பெரியபாண்டி எனக்கு என்ன உறவு என்றால் பெரியப்பா ஆவார். பெரியபாண்டியின் சொத்துக்கும் அடுத்து கிழக்கே உள்ள10 செண்டை எனது மற்றொரு பெரியப்பா நாகு என்பவர் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

3. மேற்படி நாகு கிரையச்சொத்திற்கு கிழக்கே உள்ள10 செண்டை மற்றொரு பெரியப்பா சின்னபாண்டி என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது பெரியப்பா நாகு கிரையம்பெற்ற 10 செண்டில் வடபுறம் 5 செண்டை சேகர் என்பவருக்கு கிரையம் செய்து விட்டார்

என்றால் சரிதான். மீதமுள்ள தென்புறம் 5 செண்டை எனது தந்தைக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி சொத்திற்கு வழக்கு இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

4. வா.சா.ஆ.1 மூலமாக எனது தந்தை கிரையம் பெற்ற 10 செண்டில் எனது பெரியப்பா நாகுவிற்கு எத்தனை செண்டு தானமாக எழுதிக்கொடுத்தார் என்றால் தென்புறம் 5 செண்டு ஆகும். மேற்படி தானப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பத்திரத்தின் நகல் என்கைவசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

5. எனது பெரியப்பா நாகு உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ஒருமகன், 2பெண்பிள்ளைகள் ஆவார்கள். மேற்படி பிள்ளைகளின் வாரிசுகள் எங்கு உள்ளார்கள் என்றால் திருப்பரங்குன்றத்தில் உள்ளார்கள். எனது பெரியப்பா மகனுக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளது. எனது பெரியப்பாவிற்கு எனது தந்தை எழுதிக்கொடுத்த 5செண்டில் அவர் வீடு அமைத்துள்ளார்.

6. மேற்படி வீட்டில் யார் குடியிருந்து வருகிறார் என்றால் எனது பெரியப்பாவின் வாரிசுகள் வசித்து வருகிறார்கள். எனது தந்தை எனது பெரியப்பா நாகுவிற்கு எழுதிக்கொடுத்த தென்புறமுள்ள5செண்டு வீட்டிலிருந்து வடபுறம் கிரிவீதிக்கு வருவதற்கான பாதைக்காகத்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் எனது பெரியப்பாவின் வாரிசுகள் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான்.

7. வழக்குச் சொத்து விபரம் தெரியுமா என்றால் பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியும். வழக்குச்சொத்தில் வடக்கு நான்குமாலாக கிரிவீதியும், தெற்கே எனது பெரியப்பா நாகுவின் வீடும், மேற்கே போலிஸ் குடியிருப்பு பகுதியும், கிழக்கே செல்லப்பாண்டியம்மாள் மற்றும் ஜெயா என்பவர் இடம் என்று பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிராதில் கிழக்கு நான்குமாலாக பிரதிவாதி சொத்து என்று கூறப்பட்டிருந்தால் அது தவறானதாகும்.

8. வழக்குச் சொத்திற்கு கிழக்கு பக்கம் யார் சொத்து உள்ளது என்றால் எங்களுடைய சொத்து உள்ளது. மேற்படிச்சொத்து வா.சா.ஆ.1ல் கட்டுப்படாது என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி ஜெயா என்பவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அண்ணன் மனைவி ஆவார். எனது பெரியப்பா பெரியபாண்டி என்பவரின் மகன் பாலு என்பவரின் மனைவி ஆவார். மேற்படி பாலு என்பவர் அவரது மனைவி ஜெயாவிற்கு வா.சா.ஆ.4செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிவைத்துள்ளார் என்றால் அவருடைய இடத்தை எழுதிவைத்துள்ளார்.

9. வா.சா.ஆ.4 குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.5 குறித்து தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. எங்களது இடத்தை 1ம்பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கில்தான் நான் தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். எனது தந்தையை வண்டிக்கோபால் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான்.

10. அம்மாவாசி என்பவர் யார் என்றால் எனது பெரியப்பா சின்னப்பாண்டியின் மகன் ஆவார். எனது தந்தை தாக்கல் செய்த வழக்கு விபரம் பற்றி தெரியும் என்றால் சரிதான். எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட வடபுறம் உள்ள 5செண்டில் மாட்டுக்கொட்டம் அமைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மாட்டுக்கொட்டத்தின் அருகில் கிழக்குபக்கம் வேலி அமைத்துள்ளோம் என்றால் சரிதான். வடக்கு பக்கமும் வேலி அமைத்துள்ளோம் என்றால் சரிதான்.

11. 5செண்டு முழுவதுமாக வேலி அமைத்து செட் அமைத்துள்ளோம் என்றால் சரிதான். எங்களுக்கு பாத்தியப்பட்ட 5செண்டில் வீடும், மாட்டுக்கொட்டமும் உள்ளது என்றால் சரிதான். 7அடிபாதை என்பது எனது தந்தை வாங்கிய 10 செண்டில் வடபுறம் உள்ள 5 செண்டில் கீழ்பக்கம் உள்ளதாக கூறப்படுகிறது என்றால் சரிதான்.

12. மேற்படி 7அடி பாதையை காண்பிப்பதற்கு எழுத்து மூலமான ஆவணம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. எனது பெரியப்பா நாகுவின் வாரிசுகள் எங்களது இடத்தில் மேற்படி 7அடிபாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களுக்கும், எனது பெரியப்பாவின் வாரிசுகளுக்கும் விரோதம் இல்லை என்றால் சரிதான்.

13.எனது தந்தை கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1கிரையச்சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். எனது 3பெரியப்பாக்கள் பெரியபாண்டி, நாகு, சின்னப்பாண்டி ஆகியோர் கிரையம் பெற்ற சொத்துக்களில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். எனது பெரியப்பா மகன் பாலு மற்றும் அவரது மனைவி ஜெயா குடும்பத்தாருக்கும், எங்களது குடும்பத்துக்கும் விரோம் இல்லை என்றால் சரிதான்.

14. வழக்கு  தாக்கல் செய்வதற்கு முன்பாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குற்றவழக்கில் இருந்து விடுபடுவதற்காகத்தான் இவ்வழக்கை எனது தந்தை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்குச் சொத்தில் பிரதிவாதிகள் எவ்வித இடையூம் செய்யவில்லை என்றாலும், எனது தந்தைான் பிரதிவாதிகளுடன் சண்டை செய்தார் என்றால் சரியல்ல.

15. 1ம் பிரதிவாதிக்கு 2ம்பிரதிவாதி கிரையம் எழுதிக்கொடுத்த சொத்தை எனது தந்தை கிரையம் பெற முயற்சி செய்து முடியாமல் போனதால் இவ்வழக்கை எனது தந்தை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாதை இல்லை என்றும், 1ம்பிரதிவாதி கிரையம் பெற்றசொத்தில் மோசடியாக பாதை வேண்டும் என்று 1ம்பிரதிவாதியிடம் பாதை வேண்டும் என்று எனது தந்தை பிரச்சனை செய்ததால்தான் குற்றவழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

16. வழக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல. எனது பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்தபிறகு எனக்கும், பிரதிவாதிகளுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். தாவா வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும்  என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.55p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கைடியொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.16 18:14:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.